## சுருக்கம்

வீட்டுவசதி – தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் – தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு 31.5.2013 முடிய 100 விழுக்காடு தவணைத் தொகையினை செலுத்தியுள்ள 26 சங்கங்களுக்கு கடன் வழங்குவதற்கும், வருங்காலங்களில் 100 விழுக்காடு கடன் தவணைத் தொகையினை நிலுவையின்றி செலுத்தும் அனைத்து சங்கங்களுக்கும் புதிய கடன்கள் வழங்குவதற்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீ.கூ.ச1)துறை

**அரசாணை(நிலை)எண்.4** **நாள்: 06.01.2014.**
**விஜய மார்கழி 22**
**திருவள்ளுவர் ஆண்டு 2044**

**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (ப) எண். 154, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(வீகூச 1) துறை, நாள் 01.09.2009
2. அரசாணை (நிலை) எண்.123, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (வீகூச1)துறை, நாள் 5.6.2013.
3. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் கடித ந.க.எண்.4600/2008/ஆ3, நாள் 03.07.2013.

---

**ஆணை:**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன்களுக்கான தவணைத் தொகைகள் செலுத்துவதற்கு கடன் வசூல் முன்னேற்றம் அடையும் வரை புதிய கடன்கள் வழங்குவதை நிறுத்தி வைத்து ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், கடன் வசூலில் 100 விழுக்காடு கடன் தவணைத் தொகையினை நிலுவையின்றி செலுத்திய 72 சங்கங்களுக்கு மட்டும் புதிய கடன்கள் வழங்க ஏதுவாக அரசாணை (ப) எண்.154, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(வீகூச.1) துறை நாள் 1.9.2009ல் விதிக்கப்பட்டுள்ள தடையாணையை தளர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் இதர விவரங்களுடன், தமிழ்நாடு வீட்டுவசதி இணையத்திற்கு 31.5.2013 முடிய 100 விழுக்காடு கடன் தவணைத் தொகையினை நிலுவையின்றி செலுத்தியுள்ள 26 சங்கங்களுக்கு கடன் வழங்குவதற்கும், வருங்காலங்களில் 100 விழுக்காடு கடன் தவணைத் தொகையினை நிலுவையின்றி செலுத்தும் அனைத்து சங்கங்களுக்கும் தமிழ்நாடு கூட்டுறவு

வீட்டுவசதி இணையம் மூலம் புதிய கடன்கள் வழங்குவதற்கு தக்க ஆணைகள் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் செயற்குறிப்பை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு தற்போது 31.5.2013 முடிய 100 விழுக்காடு தவணைத் தொகையினை செலுத்தியுள்ள 26 சங்கங்களுக்கு கடன் வழங்குவதற்கும், வருங்காலங்களில் 100 விழுக்காடு கடன் வசூல் செய்யும் சங்கங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் மூலம் புதிய கடன் வழங்க அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது

6. இவ்வாணை 27.11.2013 ஆம் நாளிட்ட நிதித்துறையின் அசாகு எண் 44791/நிதி/(வீ.வ)/13 ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தங்க கலியபெருமாள்**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்(வீட்டுவசதி),
சென்னை–35
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்,
சென்னை-7

நகல்:
நிதித் (வீட்டுவசதி) துறை, சென்னை-9.
அமைச்சர் (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
அரசு செயலாளரின் தனிச் செயலர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
சென்னை-9.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (அநமு1)த் துறை,
சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்.**